செ.வெ.எண்: 30 நாள்: 14.12.2017

# பத்திரிக்கை செய்தி

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவும், அதன் இயற்கை அழகை பாதுகாத்திடவும் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, நீலகிரி மாவட்ட எல்லையில் அமைந்துள்ள பர்லியார், கக்கநள்ளா மற்றும் நம்பியார்குன்னு ஆகிய சோதனைச் சாவடிகளில் வழியாக நீலகிரி மாவட்ட பதிவெண் கொண்ட வாகனங்களும். நீலகிரி மாவட்டத்தை இருப்பிடமாகக் கொண்டு, பிற மாவட்ட/மாநில பதிவு எண் கொண்ட வாகனங்களை தவிர, நீலகிரி மாவட்டத்திற்குள் வரும் வெளி மாநில மற்றும் வெளிமாவட்ட பதிவெண் கொண்ட அனைத்து வாகனங்கள் மற்றும் சுற்றுலா வாகனங்களுக்கும் பசுமை வரி (Green Tax) வாகனம் ஒன்றுக்கு ரூ.20- (ரூபாய் இருபது மட்டும்) வசூலிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதன்படி, 10.12.2017 அன்று முதல் பசுமை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

ஆகவே, இம்மாவட்டத்திற்கு வருகை தரும் வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்ட பதிவெண் கொண்ட அனைத்து வாகனங்களும் மேற்கண்ட சோதனைச் சாவடிகளை பயன்படுத்தும்போது வாகனம் ஒன்றுக்கு ரூ.20- (ரூபாய் இருபது மட்டும்) பசுமை வரியாக (Green Tax) செலுத்தி உரிய ரசீது பெற்றுக் கொண்டு மாவட்ட நிர்வாகத்திற்கு தகுந்த ஒத்துழைப்பு நல்குமாறு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒம்- ஜெ. இன்னசென்ட் திவ்யா,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

//உண்மை நகல்//உத்தரவுப்படி//

14/12/17

மாவட்ட ஆட்சியருக்காக,
நீலகிரி மாவட்டம்.

14/12/2017